

கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2026) தருமபுரியில், ஐ.என்.ஏ. சபையின் அருட்தந்தை பிலிப் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கிறிஸ்தவ பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன், தருமபுரி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பழனியப்பன், பாலக்கோடு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2026) தருமபுரியில், அனைத்து வணிகர் சங்கத் தலைவர் துரைராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, வணிகர் பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன், தருமபுரி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பழனியப்பன், பாலக்கோடு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது!

# ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள்வீர்!

## நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஏப். 16–

"தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது. எனவே அனைத்து அரசியல் கட்சியினரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும்'' என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்ற கழக உறுப்பினர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது!**

**நாடு முழுக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த பேராபத்தை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் குறித்து கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளேன்.**


**தனிப்பட்ட மனிதர்கள் அரசியல் இயக்கங்களைவிட, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நமது தலையாய கடமை.**

**எனவே, அனைத்து அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும் - நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும் என அழைக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026

# மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தேர்தல் பரப்புரைப் பயணம்!



**16.04.2026 வியாழன்**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
4 மணி - புளியங்குடி - தி.மு.க.
5.30 மணி - சங்கரன்கோவில் - காங்கிரஸ்
9 மணி - விருதுநகர் (பொதுக்கூட்டம்) - தே.மு.தி.க.

**17.04.2026 வெள்ளி**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி - ம.தி.மு.க.

**18.04.2026 சனி**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மொடக்குறிச்சி - ம.தி.மு.க.

**19.04.2026 ஞாயிறு**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருநெல்வேலி - தி.மு.க.
பாளையங்கோட்டை - தி.மு.க.
மேலப்பாளையம்

**20.04.2026 திங்கள்**

கடையநல்லூர் தொகுதி - ம.தி.மு.க.
சாம்பவர் வடகரை, ஆய்குடி,
செங்கோட்டை (பொதுக்கூட்டம்)

**21.04.2026 செவ்வாய்**

சங்கரன்கோவில் தொகுதி - காங்கிரஸ்
மாலை 4மணி திருவேங்கடம் (பொதுக்கூட்டம்)

**'தாயகம்'**
*சென்னை - 8*

**தலைமைக் கழகம்**
*மறுமலர்ச்சி தி.மு.க.,*



ஆவடி தொகுதியில் போட்டியிடம் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சாமுநாசர் திருநின்றவூர் நகரம் 22, 23, 24, 25 ஆகிய வார்டுகளில் உள்ள வீடு வீடாக சென்று சென்று திமுக அரசின் செய்த சாதனைகளையும் திருநின்றவூர் நகராட்சி பகுதியில் நிறைவேற்றப் பட்டுள்ள திட்டப்பணிகளை எடுத்துக் கூறி பொதுமக்களிடம் துண்டு பிரச்சாரம் வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு நகரக் கழக செயலாளர் தி.வை.இரவி தலைமையில் வாக்கு சேகரித்தார் உடன் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி, நகர மன்ற தலைவர் உஷா ராணி ரவி, தேர்தல் கண்காணிப்பாளர் இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், பார்வையாளர் வே.தியாக ராஜன், நிர்வாகிகள் அன்பழகன், சி.கமலக்கண்ணன், நாகராஜ், பேபி, ரவி, பாபு, பி.எல்.ஆர்.யோகா, வார்டு செயலாளர்கள் ரவிச்சந்திரன், ஆர்.சுகுமார், ஜீவானந்தம், சதீஷ்குமார், சசிகலா, தி.வை.சுரேஷ் குமார், வெங்கடேசன், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், பிரியாகுமார், எஸ்.சுதர்சனம், பட்டாணி கார்த்திக், பிரசன்னா, துரையரசன், ஸ்டிவாக், லோகேஷ், போமேஸ், ப்ரீத்திவு வீ.மகேஷ்குமார், ரோசன், சுபாஷ், உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை மேற்கு மாவட்டம், 118 வது வட்டம், ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் எழிலன் நாகநாதனை ஆதரித்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவைத் தலைவர் கி.நடராசன் ஆகியோரின் வழிகாட்டுதல்படி, உதயசூரியன் சின்னத்திற்கு மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், அலுவலக பணியாளர்கள் சங்கப் பொதுச் செயலாளர் வி.மகேந்திரன், சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் எஸ்.சுந்தர மூர்த்தி மற்றும் சங்க நிர்வாகிகள், முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து வாக்கு சேகரித்தனர்.

### மயிலை த.வேலுவை ஆதரித்து – கி.நடராஜன்

# மயிலை 124 வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

## கோவி லெனின் – எஸ்.முரளி முன்னிலை! மா.பா.அன்பு வரவேற்புரை!

சென்னை, ஏப். 16–

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை தொகுதியில் இன்று (16.04.2026) மாலை 4.00 மணி அளவில் மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து கழக தொமுச மாநில பொதுச் செயலாளர் கி.நடராசன், மயிலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோவி லெனின், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி ஆகியோர் முன்னிலையில், 124 வது அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு வரவேற்பி லும் மயிலாப்பூர் குளத்தில் மந்தைவெளி மார்க்கெட் வரை தொடங்கி தீவிர வாக்கு சேகரிக்கிறார்.

ஆகவே மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகி கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2,BDO,BDA மற்றும் கழக முன்னோடி கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு 124வது அ வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு கேட்டுக் கொண்டுள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். நான்கு கட்ட பரப்புரை முடிந்த நிலையில் ஐந்தாம் கட்ட பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**16.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | மதுரை கிழக்கு | வண்டியூர், சௌராஷ்டிராபுரம், மதுரை. |
| காலை 10.30 மணி | மதுரை வடக்கு | புதூர் பேருந்து நிலையம் அருகில், மதுரை. |
| காலை 11.30 மணி | சோழவந்தான் | பேருந்து நிலையம் அருகில், அலங்காநல்லூர். |
| மாலை 4.00 மணி | ஆண்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், ஆண்டிப்பட்டி. |
| மாலை 4.45 மணி | போடிநாயக்கனூர் | பழனிசெட்டிபட்டி. |
| மாலை 5.45 மணி | பெரியகுளம் | புதிய பேருந்து நிலையம் பிரிவு, உட்லண்ட்ஸ் ஹோட்டல் அருகில், பெரியகுளம். |
| இரவு 7.15 மணி | நிலக்கோட்டை | கொடைக்கானல் சாலை. அம்மைநாயக்கனூர். |
| இரவு 8.00 மணி | திண்டுக்கல் | நாகல் நகர், திண்டுக்கல். |
| இரவு 8.45 மணி | வேடசந்தூர் | ஆத்துமேடு, வேடசந்தூர். |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 15.4.2026

கலைஞர் 100
1924 - 2023





திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் கணேசபுரம் பெரியார்தெருவில் உதய சூரியன் சின்னத்திற்கு பொதுமக்களிடம் கழக அரசு செய்த சாதனை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார் உடன் மாவட்ட அவை தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர் கா.அரிகிருஷ்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பி.கே. நாகராஜ், கே. ஏ. மதியழகன், நிர்வாகிகள் கொப்பூர் திலீப், மோகனசுந்தரம், பாலசுப்பிரமணி, திராவிட மணி, பஞ்சாட்சரம், தயா, சத்யா, தனசேகர், பாபு, மணி, ரகு, முத்து, கார்த்திக், வி. அருண், குமரவேல், டில்லி, அ.மோகன், அமர்நாத், மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் கலந்து கொண்டனர்.



கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜனை ஆதரித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மாநில தகவல் தொழில்நுட்ப அணியின் துணை செயலாளர் சி.எச்.சேகர் அவர்களின் ஆலோசனைப்படியும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி.ரமேஷ் ஏற்பாட்டில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணைச்செயலாளருமான சைதை எம்.எஸ்.ஹரிபாபுவுடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட தொகுதி, ஒன்றிய, பேரூராட்சி, நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.